**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No. 240/2022**

Prosecution witness : 3

| | | | |
|---|---|---|---|
| Name: | கிங்ஸ்லி தேவ் ஆனந்த் | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Accused present.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of** 1873 **on the day of** 08.08.2025

**முதல் விசாரணை**:

நான் தற்போது திருநெல்வேலி மாநகரம் குழந்தைகள் கடத்ததல் தடுப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2021ம் வருடம் கோர்ட்டார் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது 23.11.2021ம் தேதி காலை 9.15 மணிக்கு கோர்ட்டார் காவல்நிலைய உதவி ஆய்வாளர் திரு.சுரேஷ்குமார் என்னை போனில் தொடர்பு கொண்டு அவரது ரகசிய தகவலாளி கீழமறவன் குடியிருப்பு, நேதாஜி தெரு, பாஸ்கர் மகன் பபின் என்பவர் இந்து கல்லூரி ரோடு அநாதை மடம் கேட்டின் பின்பக்கம் கஞ்சா என்ற போதைப்பொருளை வைத்துக்கொண்டு கல்லூரி மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும், இளஞ்சிறார்களுக்கும் விற்பனை செய்ய வைத்துக்கொண்டு இருப்பதாகவும் ரைடுக்கு அனுமதி கேட்டவரை அனுமதியளித்தேன். பின்னர் 12.30 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பெற்று சம்பவ இடத்திற்கு 13.00 மணிக்கு சென்று சம்பவ இடத்தையும், அதன் சுற்றுப்புறங்களை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். சாட்சிகளாக திரு.ரமேஷ்குமார், திரு.சுதாகர் ஆகியோர்களிடம் பார்வை மகஜரில் கையொப்பம் பெற்றேன். பின்னர் சாட்சிகள் சுரேஷ்குமார், உதவி ஆய்வாளர் - ரமேஷ்குமார், சுதாகர் , சிறப்பு உதவி ஆய்வாளர்-திரு.ரகு, சிறப்பு உதவி ஆய்வாளர் -திரு.ராஜன் , தலைமைக்காவலர்- 1515-

திரு.எட்வின்ஜோஸ், முதல்நிலை காவலர் -2552-திரு.உமர்செரிப், சுஜித் மற்றும் கருப்பசாமி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் தயார் செய்தேன். பின்னர் வழக்கின் எதிரியை தக்கவழிக்காவல் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். பின்னர் வழக்கு சொத்து மற்றும் படிவம்-91 ஐ நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். பின்னர் வழக்கின் சொத்தை பகுப்பாய்வு செய்ய நீதிமன்றத்திற்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். பின்னர் 03.03.2022ம் தேதி திரு.குருசாமி, தலைமை எழுத்தர், முதன்மை சிறப்பு நீதிமன்றம் மற்றும் முதல்நிலை காவலர் -664 -திரு.கிருஷ்ணபிரசாத் , திரு வேல்முருகன், பகுப்பாய்வாளர் வட்டார தடய அறிவியல் ஆய்வாளர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் தயார் செய்தேன். பின்னர் பகுப்பாய்வு முடிவு கிடைக்கப்பெற்று அதில் கெனபினாய்டு என்ற போதைப்பொருள் இருப்பதாக அறிக்கை பெற்றதால் வழக்கின் விசாரணையை முடித்து 29.03.2022ம் தேதி வழக்கின் எதிரியின் மீது 8(c) r/w20(b)(ii)(C) NDPS ACTன் படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன். படிவம் -91 அ.சா.ஆ. 7 ஆகும். சம்பவ இடம் தொடர்பான பார்வை மகஜர் அ.சா.ஆ.8 ஆகும். சம்பவ இடம் தொடர்பான மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 9 ஆகும். காவல் ஆய்வாளர் அவர்கள் கைப்பற்றிய சொத்தினை பகுப்பாய்வு செய்யக்கோரி நீதிமன்றத்திற்கு அனுப்பிய வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ. 10 ஆகும். கைப்பற்றிய சொத்தினை பகுப்பாய்வு செய்யக்கோரி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு நீதிமன்றம் அனுப்பிய கடிதம் அ.சா.ஆ. 11 ஆகும். பகுப்பாய்வு அறிக்கை அ.சா.ஆ. 12 ஆகும்.

**குறுக்கு விசாரணை:**

எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.